[5th July 1962

போலீஸ் நிலையம் (தும்மனட்டி)

*** 146 கேள்வி.—திரு. ஜே. மாதா கவுடர் :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் தும்மனட்டியில், போலீஸ் நிலையம் வைக்க கோரி பொது மக்களிடமிருந்து விண்ணப்பம் வந்திருக்கிறதா?

(இ) அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes Sir.

(b) There is no need for a Police station at Thummanatti. A proposal to open an outpost at that place was submitted by the Inspector-General of Police but subsequently withdrawn. The Inspector-General has instructed the Superintendent of Police, Nilgiris to submit a revised proposal for the transfer of villages to the jurisdiction of the nearest police stations.

திரு. ஜே. மாதா கவுடர் : தற்போது தும்மனட்டிற்கு அருகாமையில் தேநாடுகம்பை என்ற இடத்தில் போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. அவசரமாக அங்கு போக நேர் ரோடு கிடையாது மலைப்பகுதியில். உதகைக்கு வந்து சுற்றிக் கொண்டு அந்த இடத்திற்கு போக வேண்டியிருப்பதால் காலதாமதம் ஏற்படும் காரணத்தினால் அதற்கு அருகில் பல ஊர்கள் இருப்பதாலும் அங்கு போலீஸ் ஸ்டேஷன் இல்லாவிடினும் ஒரு அவுட் போஸ்டாவது வைக்க அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட இலாகாவிற்கு அறிவிப்பார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தேநாடுகம்பை போலீஸ் ஸ்டேஷனை உதகையில் வைத்து விடலாம் என்ற யோசனை இருக்கிறது. உதகையில் வைக்க வீட்டு வசதி வேண்டும். அது இப்போது கவனிக்கப்பட்டு வருகிறது.

திரு. மா. இராசாங்கம் : மாடல் போலீஸ் ஸ்டேஷன் என்று ஒரு சில இடங்களில் மட்டும்தான் இருக்கின்றன. மற்ற எல்லா இடங்களுக்கும் இத்தகைய கட்டிடங்கள் கட்டிக் கொடுக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மாடல் என்று சொன்னால் சில இடங்களில்தான் இருக்கும். சர்வசாதாரணமாகப் போய் விட்டால் அது மாடலாக இருக்காது. முதலில் மாடலாகக் கட்டி பின்னர் தான் மற்ற இடங்களுக்கு விஸ்தரிப்பது.

Smuggling of country arrack

* 145 *Q.*—SRI V. KRISHNAMOORTHY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the steps taken to prevent the transport into this State of country arrack from the Pondicherry State?

THE HON. SRI P. KAKKAN : The preventive staff are keeping vigilant watch over the suspected spots in Pondicherry and road blocks are held on certain selected routes and dates when all quick moving vehicles, pedestrians head-loads, etc. coming from Pondicherry State are checked.